# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை 06.05.2025 கதிர் 188



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




# அமைதியான குட்டித் தேர்தல்

## வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பம்





கொழும்பு, மே 06

நாடளாவிய ரீதியில் 339 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது. காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்கள் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று சுமுகமாக வாக்களித்தனர்.

7

## வடக்கு – கிழக்கில் தமிழரசுக் கட்சி அமோக ஆதரவுடன் வெற்றி பெறும்

### சாணக்கியன் எம்.பி. நம்பிக்கை



மட்டக்களப்பு, மே 06

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அமோக ஆதரவுடன் வெற்றி பெறும் என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நம்பிக்கை தெரிவித்தார்.

பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி தேசிய பாடசாலையில் இன்று

7

## நாடு திரும்பிய கையுடன் வாக்களித்த ஜனாதிபதி

கொழும்பு, மே 06

வெசாக் விழாவில் கலந்துகொள்ள வியட்நாம் சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று காலை வியட்நாமில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய கையோடு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தார்.

7



## யாழ்ப்பாணத்தில் சுமுகமான வாக்களிப்பு

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று சுமுகமாக நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் என்ற கட்டமைப்பில் 17 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

குறித்த இந்தச் சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல்

7







- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கட்டுநாயக்க ஊழியர்கள் தங்குமிடங்களில் முடங்கினர்



கொழும்பு, மே .6

தற்போதுநடைபெற்றுக்கொண்டிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்க, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்குப் பதிலாக, தங்கள் தங்குமிடங்களிலேயே தங்கியிருப்பது கவனிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம், தற்போதைய கட்டுப்படியாகாத போக்குவரத்து செலவுதான் என அறியமுடிகின்றது.

தற்போது, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் சுமார் 33,000 ஊழியர்கள் பணிபுரிகின்றனர், அதே எண்ணிக்கையிலான ஊழியர்கள்சுற்றியுள்ள நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர்.

புத்தாண்டு விடுமுறைக்காக அவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்பு தங்கள்சொந்த ஊர்களுக்குத் திரும்பியதால், அவர்களுக்கு மீண்டும் கணிசமான அளவு பணம் செலவாகும், மேலும் அவர்கள் மீண்டும் சம்பளத்தை மே. 10ஆம் திகதியன்று பெறுவார்கள் என்பதால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த ஊழியர்களுக்கு, தேர்தல் நாளுக்காக அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பாமல் தங்கள் தங்குமிடங்களிலேயே தங்கியிருப்பது தெரியவந்தது.

இந்தத் தேர்தல் இந்த ஊழியர்களுக்கு வரவிருக்கும் வெசாக் விடுமுறையுடன் ஒத்துப்போயிருந்தால், அந்த விடுமுறையைப் பயன்படுத்தி தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்ப அவர்கள் ஆர்வமாக இருந்திருப்பார்கள்.

(ஐ)

# நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



கொழும்பு, மே .6

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்காக 65,000 இற்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நிலையங்கள், வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மொத்தமாக 73,000 இற்கும் அதிகமான பொலிஸார் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாருக்கு மேலதிகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 2,337 பேரும் பாதுகாப்புப் பணிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், அவசர தேவைகளின்போது, ஒத்துழைப்பை வழங்குவதற்காக முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 9,906 பேர் பாதுகாப்பு ஒத்துழைப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்குப் பின்னர் ஏதேனும் வன்முறைகள் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்காக கலகமடக்கும் பொலிஸாரும் தயார் நிலையில் உள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)



# 20ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டம் பிரதம விருந்தினராக பிரதான உரையை நிகழ்த்திய ஜனாதிபதி!

கொழும்பு, மே .6

வியட்நாமிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இன்று ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் 20ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று பிரதான உரையை நிகழ்த்தி உள்ளார். "மனித கண்ணியத்திற்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை, உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்" என்ற தொனிப் பொருளில் இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் நாளை மறுதினம் வரை இடம்பெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் 20 ஆவது வெசாக் தின நிகழ்வுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் அழைப்பின் பேரில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பிரதான உரையை நிகழ்த்தி உள்ளார்.

நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி இலங்கை நேரப்படி இன்று (06) காலை 7.40 மணியளவில் பிரதான உரையை நிகழ்த்தி உள்ளார்.

இந்த உரை இன்று உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் மாலை 5:00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 20 ஆவது வெசாக் தின நிகழ்வில் இலங்கை, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகள் உட்பட சுமார் 2,800 பேர் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளரை தாக்கிய NPP கட்சியின் ஆதரவுக் குழு!

கொழும்பு, மே .6

நடைபெற்று வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை, NPP கட்சியின் ஆதரவுக் குழு ஒன்று தாக்கிய சம்பவம் வேலணை துறையூரில் இடம்பெற்றுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வேலணை பிரதேசத்தின் கள நிலைவரங்களை செய்தி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, வேலணை துறையூர் ஐயனார் வித்தியாலய வாக்காளர் மையத்தின் அருகே பீ யின் ஆதரவாளர்கள் இன்னொரு தரப்பு ஆதரவாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டிருந்த சம்பவத்தை வீடியோ செய்தியாக சேகரித்துக் கொண்டிருந்த போதே குறித்த N குழு ஊடகவியலாளரை தாக்கியுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளரால் ஊர்காவற்றுறை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பினார் ஜனாதிபதி!

கொழும்பு, மே .6

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் அழைப்பின் பேரில், வியட்நாமிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இன்று (06) பகல் மீண்டும் நாடு திரும்பினார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த 04ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த விஜயம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வியட்நாமிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் 20ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று பிரதான உரையை நிகழ்த்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"மனித கண்ணியத்திற்கான ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மை, உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த புரிதல்" என்ற தொனிப் பொருளில் இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம் நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி இலங்கை நேரப்படி இன்று (06) காலை 7.40 மணியளவில் பிரதான உரையை நிகழ்த்தி உள்ளார்.

இந்த உரை இன்று உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் மாலை 5:00 மணிக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழு ஒன்றும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள்!

கொழும்பு, மே .6

அம்பாறை, பதியதலாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது கடமைக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பிபில பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் இன்று (06) அதிகாலை 05.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த அதிகாரி அடுத்த ஆண்டு ஓய்வு பெற திட்டமிடப்பட்டிருந்த நிலையில் தவறான முடிவெடுத்துள்ளார்.

உயிரிழந்த நபரின் மனைவி, கடந்த ஆண்டு புற்றுநோயால் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பதியத்தலாவை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணிக்கு களத்தடுப்பு பயிற்சியளிக்கும் ஆர். ஸ்ரீதர்!

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் களத்தடுப்பு தரத்தை உயர்த்துவதற்காக முன்னாள் இந்திய களத்தடுப்பு பயிற்சியாளர் ராமகிருஷ்ணன் ஸ்ரீதரை 10 நாள் திட்டத்திற்கு இலங்கை கிரிக்கெட் நியமித்துள்ளது.

இந்த மாதம் 07ஆம் திகதி முதல் இந்த பயிற்சி திட்டம் ஆரம்பமாகிறது.

இதில் ஆண்கள் மற்றும் மகளிர் தேசிய அணிகள் உட்பட தேசிய, உயர் செயல்திறன் மற்றும் கழக பயிற்சியாளர்களுடன் இணைந்து ஸ்ரீதர் பணியாற்றவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் கடமைக்குச் சென்ற பெண் அதிகாரி திடீர் உயிரிழப்பு!

கொழும்பு, மே .6

நாடளாவிய ரீதியில் இன்றையதினம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்று வரும் நிலையில், கண்டி கண்ணொருவ கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள வாக்குச் சாவடியில் தேர்தல் கடமைக்காகச் சென்ற பெண் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கலகெதர மினிகமுவவில் வசிக்கும் 33 வயதுடைய கிருஷாந்தி குமாரி தசநாயக்க (33) என்ற பெண் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கண்ணொருவ தாவர மரபணு வள மையத்தின் அபிவிருத்தி அதிகாரி ஆவார்.

திடீரென உடல்நிலையில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, சிகிச்சைக்காக மாலை 5 மணியளவில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் பிரேத பரிசோதனைக்குப் பின்னரே மரணத்திற்கான காரணத்தை உறுதியாகக் கூற முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளமை

## உயிரிழந்த பல்கலை மாணவன் விவகாரம் மேலும் இரு மாணவர்கள் கைது!

கொழும்பு, மே .6

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் சரித் தில்ஷானின் மரணம் தொடர்பில், மேலும் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 04 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் 4 மாணவர்கள் சமனலவெவ பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்தனர். இதனையடுத்து குறித்த மாணவர்கள் விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் இன்று பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

சரித் தில்ஷானின் மரணம் தொடர்பில் 08 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 11 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த நிலையிலேயே இன்று (06) மேலும் இரு மாணவர்கள் சரித் தில்ஷானின் மரணம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்க பகுதியில் துப்பாக்கிச் சூடு– ஒருவர் படுகாயம்!

கட்டுநாயக்க 13 ஆம் தூண் பகுதியில் இன்று காலை 10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சீதுவை விஜயகுமாரதுங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

நபர் ஒருவர் கலகம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸ் அதிகாரிகள் குழு அந்த நபரை கைது செய்வதற்காக குறித்த பகுதிக்கு சென்றுள்ளது.

இதன்போது, குறித்த நபர் பொலிஸ் அதிகாரி ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் உடனடியாக செயல்பட்ட பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபரின் முழங்காலுக்கு கீழே துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து காயமடைந்த நபர் சீதுவை விஜயகுமாரதுங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காஷ்மீரில் 6 நீர்மின் நிலைய பணிகள் துவக்கம்? சிந்து நதி ஒப்பந்தம் ரத்தால் மத்திய அரசு வேகம்





புதுடில்லி: இந்தியா - பாகிஸ்தான் இடையிலான சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்ததை தொடர்ந்து, ஜம்மு - காஷ்மீரில் ஆறு நீர்மின் நிலைய திட்டங்களை விரைவாக முடிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தானுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்தது.

அதில், இந்தியா - பாக்., இடையே, 1960ல் கையெழுத்தான சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் அறிவிப்பு பாகிஸ்தானுக்கு பேரிடியாக விழுந்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, ஜம்மு - காஷ்மீரில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த ஆறு நீர்மின் நிலைய பணிகளை மீண்டும் துவங்கி விரைவில் முடிக்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் இந்த வாரத்தில் ஆலோசனை கூட்டம் நடக்க உள்ளது.

இதில் நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீல், மின்துறை அமைச்சர் மனோகர்லால் கட்டார், வேளாண் அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

இந்த நீர்மின் நிலைய திட்டங்களை விரைந்து முடித்தால், 10,000 மெகாவாட் மின்சாரம் ஜம்மு - காஷ்மீரில் உற்பத்தி செய்யப்படும். மேலும், நிலப்பரப்பு பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்கு போதிய அளவு நீர் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

தற்போது இந்த ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதால் அதற்கான தேவை இல்லை. செனாப், ஜீலம் நதியில் கூட புதிய திட்டங்களை மத்திய அரசு துவக்க முடியும்.

இதற்கிடையே, பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து ஜம்மு - காஷ்மீர் முழுதும் பயங்கரவாத ஒழிப்பு வேட்டையை நம் ராணுவம் முடுக்கிவிட்டுள்ளது.

பூஞ்ச் மாவட்டத்தின் சுரான்கோட் பகுதியில் ராணுவமும், ஜம்மு - காஷ்மீர் போலீசும் இணைந்து தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது, ஹரி மாரோட் என்ற கிராமத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டை கண்டுபிடித்தனர்.

அங்கிருந்து, ஐ.இ.டி., எனப்படும் அதிசக்தி வாய்ந்த ஐந்து வெடிகுண்டுகள், ரேடியோ தகவல் தொடர்பு சாதனங்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன(ஐ).




## அப்பல்லோ மருத்துவமனையில் வைகோ அனுமதி!

ம.தி.மு.க., பொதுச் செயலாளர் வைகோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார்.

வைகோ அண்மைக்காலமாக அவ்வப்போது உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டு வருகிறார். கடந்தாண்டு இதே மே மாதத்தில் கால் இடறி விழுந்ததில் இடதுதோளில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று பூரண குணம் அடைந்தார்.

இந் நிலையில் மீண்டும் உடல்நலம் பாதிக்கப்பட்ட வைகோ தற்போது சென்னை க்ரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளார். வீட்டில் தவறி விழுந்ததில் கை விரலில் காயம் அடைந்ததாக தெரிகிறது.

அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். வைகோ மருத்துவமனையில் இருப்பதை அறிந்த தொண்டர்கள் கவலை கொண்டு அவரின் உடல்நலம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

(ஐ)

## முதல்வர் அறிவித்த திட்டங்களுக்கு அரசாணை, நிதி வரவில்லை




சிவகங்கையில் ஜன.21ல் முதல்வர் ஸ்டாலின் அறிவித்த ரூ.169 கோடி திட்டங்கள் குறித்து அரசாணை கூட இது வரை வெளிவரவில்லை. இத்திட்டங்கள் செயல்பாட்டிற்கு வருமா என்ற சந்தேகம் சிவகங்கை மாவட்ட மக்களிடம் எழுந்துள்ளது.

முதல்வர் ஸ்டாலின் மாவட்ட வாரியாக சென்று, மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். ஜன., 21ல் சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கல்லூரி வளாகத்தில் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். அப்போது பல்வேறு திட்டங்களையும் அறிவித்தார்.

அவர் பேசும் போது, சிவகங்கைக்கு 'ஹைலைட்' ஆக 3 திட்டங்களை அறிவிக்க உள்ளதாக கூறி, சிவகங்கையில் ரூ.89 கோடியில் புதிய கலெக்டர் அலுவலகம், அமைச்சர் பெரியகருப்பனின் சொந்த தொகுதியான திருப்புத்துாரில் ரூ.50 கோடியில் புறவழிச்சாலை திட்டம், மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காரைக்குடிக்கு ரூ.30 கோடியில் புதிய மாநகராட்சி கட்டடம் கட்டித்தரப்படும் என அறிவித்தார். ஆனால் இது வரை அதற்கான அரசாணையோ, நிதி ஒதுக்கீடு அறிவிப்போ வரவில்லை. சட்டசபை கூட்டத்தொடரில் அறிவிக்கப்படலாம் என அதிகாரிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இது சிவகங்கை மாவட்ட மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சிவகங்கை கலெக்டர் ஆஷா அஜித் கூறியதாவது: மூன்று திட்டங்களுக்கான அரசாணை வரவில்லை. இதற்கான முன்மொழிவை அரசின் பார்வைக்கு அனுப்பியுள்ளோம், என்றார். ஐ)

## 9,842 அடி உயர சிகரத்தில் ஏறி போதைக்கு எதிராக பிரசாரம்

தெலுங்கானாவைச் சேர்ந்த இளைஞர், மணிப்பூரின் மிக உயரமான சிகரமான மவுண்ட் இசோவில் ஏறி, போதைப் பழக்கத்துக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தெலுங்கானாவைச் சேர்ந்த யஷ்வந்த் என்ற ,ளைஞர் மலையேறுவதில் ஆர்வம் உடையவர். 16 வயதில் மலையேற்றப் பயிற்சியை துவங்கிய யஷ்வந்த், நாட்டில் உள்ள உயரமான சிகரங்களில் ஏறுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

மேலும் ,தன் வாயிலாக, போதைப் பழக்கம், பந்தய செயலிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியிலும் ,றங்கியுள்ளார்.


மண்ணை கடத்தும் கும்பலுடன் அதிகாரிகளே கூட்டு கண்ணை மூடிக்கொண்டு கனிமவளத்துக்கு வேட்டு

,தன்படி, மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் உள்ள மவுண்ட் டெம்பு என்று அழைக்கப்படும், 9,842 அடி உயரமுள்ள மவுண்ட் ,சோ சிகரத்தில் ஏறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதுகுறித்து யஷ்வந்த் சிங் கூறுகையில், "நாடு முழுதும் ஆயிரக்கணக்கான மக்கள் பந்தய செயலிகளுக்கு அடிமையாகி உள்ளனர். உழைத்து சம்பாதித்த பணத்தை ,ழக்கின்றனர். போதைப் பழக்கத்தால் ஏராளமான ,ளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

"எனவே, ,ந்த தீமைகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புகிறேன். இதன் ஒரு பகுதியாகவே, இந்த சிகரத்தில் ஏறியுள்ளேன்," என்றார்.

# கலைந்து போன தமிழனின் கனவு!

ரமாதேவி ரத்தினசாமி



அந்தத் தொட்டியில் மிதந்துகொண்டிருந்த கல்லையே சுற்றி நின்று எல்லோரும் அதிசயமாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். "நீரின் அடர்த்தியைவிட கல்லின் அடர்த்தி அதிகம், அதனால் கல் நீரில் மூழ்கும், மிதக்காது" என்றுதானே கஸ்தூரி டீச்சர் சொல்லித் தந்திருக்கிறார்! இது எப்படி மிதக்கிறது என்று குழப்பமாக இருந்தது. வீட்டிலிருந்து குடும்பத்துடன் ராமேஸ்வரத்துக்கு சுற்றுலா (?) வந்திருந்தோம். எண்பதுகளில் சுற்றுலா என்றாலே ராமேஸ்வரம் அல்லது திருச்செந்தூர்தான். எப்போதாவது, கொடைக்கானல், அடிக்கடி வைகை டேம். அவ்வளவுதான். ராமேஸ்வரத்தின் பெரிய கோயிலைப் பார்த்துவிட்டு, நகருக்குள் ஆங்காங்கே இருந்த சிறிய கோயில்களை வலம் வந்துகொண்டிருந்தோம். அந்தக் கோயிலின் பொறுப்பாளர் போலிருந்த 'சாமி' (!) விவரிக்கத் தொடங்கினார். "ஸ்ரீ ராமபிரான், அரக்கன் ராவணனோடு யுத்தம் செஞ்சி, சீதா பிராட்டியாரை அழைச்சுண்டு வாரதுக்காக, லங்காவுக் குக் கிளம்பினார். அப்போ கடலைக் கடக்கறதுக்காக, வானரங்களோட துணை கொண்டு, இங்கிருந்து லங்காவுக்குக் கட்டிய பாலத்தில் பயன்படுத்திய கற்கள்தாம் இதெல்லாம், சேவிச்சிக்கோங்கோ" அவர் சொல்லச் சொல்ல வீட்டின் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அரைகுறை நம்பிக்கையுடன் கல்லைத் தொடாமலேயே, தொட்ட பாவனையுடன் கண்களில் ஒற்றிக்கொண்டோம். 'கடலுக்குள்ளிருந்த பாலத்திலிருந்து கல்லை எடுத்து வந்துட்டாங்களா? அது எப்படி?' எனக்கு இன்னும் குழப்பம் தீரவில்லை. "ராமர், அனுமார் கை பட்டதால கல்லுகூட மெதக்குது பாரு, இதப் பார்க்க கொடுத்து வைச்சிருக்கணும்லா" என்று சித்தப்பா சிலாகித்துக்கொண்டார் (கிண்டலாக சொன்ன மாதிரியும் எனக்குத் தோன்றியது).

இப்படித்தான் கனமற்ற சுண்ணாம்புக்கல்லைக் காட்டி ரொம்ப காலமாகக் கதை சொல்லிக் (விட்டு) கொண்டிருந்தவர்கள், நாசா புகைப்படம் வெளியிட்டவுடன் அதுதான் ராமர் கட்டிய பாலம் எனக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர். விஞ்ஞானம் கண்டறிந்த இயற்கை உண்மையைத் தங்களது இதிகாச புராணக் கதைக்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டனர். சாட்சாத் ராமபிரானே கட்டியதாக நம்பப்படுகின்றராமாயணத்தில் 'சேது பந்தனம்' என்கிற பெயரில் குறிப்பிடப்படுகின்ற 'ராமசேது' அல்லது 'ராமர் பாலம்' என்று அழைக்கப்படுகின்றஇந்தப் பாலத்தை, 'ஆதாம் பாலம்' என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆபிரகாமிய மதங்களில் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆதாமின் கால்தடங்கள்தாம் இவை என்பது அவர்களின் நம்பிக்கை(கதை)யாக இருக்கிறது.

> "சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்ற பாரதியின் நூற்றாண்டுச் சிந்தனை, தமிழக மக்களின் 150 ஆண்டு கால கனவாகவே இருக்கிறது. தமி ழினக்கால்வாய், சேது சமுத்திரக் கால்வாய் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் இத்திட்டத்தின் அவசியம், அவசரம் குறித்து, அறிஞர் அண்ணா முதன் முதலில் நாடாளுமன்றத்தில் பேசினார். 1968 ஏப்ரல் மாதத்திய 25ஆம் நாள் காஞ்சி இதழில், "தனுஷ்கோடியைக் கடல்மூழ்க டித்ததால் தமிழன் கால்வாய் எனப்படும் சேதுக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியது அவசரமும் அவ சியமும் ஆகிவிட்டது" என்று எழுதினார்.

இலங்கையில் இருக்கும் 'ஆதாம்சிகரத்தின்' உச்சிக்குச் சென்று ஒற்றைக்காலால் ஆயிரம் ஆண்டுகள் தவமிருப்பதற்காக ஆதாம் இந்தப் பாலத்தைப் பயன்படுத்தி இலங்கையை அடைந்ததால், இது 'ஆதாம் பாலம்' என்கிறது கிறிஸ்துவ வரலாற்றுக் கதைகள்.

இந்தியா மற்றும் இலங்கையை இணைக்கும் வகையில் இப்படியொரு பாலம் இருந்ததையும் அது மனிதர்கள் நடந்து செல்ல வசதியாக இருந்ததையும் புவியியலாளர்கள் உறுதி செய்கின்றனர். அது எவ்வாறு தோன்றியது அல்லது கட்டப்பட்டது என்பதில்தான் எத்தனையெத்தனை யூகங்கள், நம்பிக்கைகள், செய்திகள்? இந்த இரு நாடுகளையும் பிரிக்கும் கடல்பகுதி 'சேது சமுத்திரம்' அல்லது 'சீ ஆப் தி பிரிட்ஜ்' என்று அழைக்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள ராமேஸ்வரத்தின் பாம்பன் தீவுக்கும் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் உள்ள மன்னார் தீவுகளுக்கும் இடையே 48 கிலோமீட்டர் தூரத்திற்கு 13 மணல் திட்டுகள் காணப்படுகின்றன. சுண்ணாம்புக் கற்களால் சங்கிலித்தொடர் போல ஆன அந்த மேடுகள் 3 அடி முதல் 30 அடி வரையிலான ஆழம் கொண்டதாகவும் சில மேடுகள் கடல் மட்டத்துக்கு மேலும் உள்ளன. இதைத்தான் 'ராமர் பாலம்' என்கின்றனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான இந்த பாக்ஜல சந்தியில், மன்னார் வளைகுடா பகுதி ஆழம் குறைவாக இருப்பதால், பெரிய கப்பல்கள் வந்தால், தரைதட்டிவிடும். அதனால் இந்தியத் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றியே செல்ல வேண்டியுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் 89 கி.மீ தூரத்திற்கு 300 மீட்டர் அகலமும் 12 மீட்டர் ஆழமும் கொண்டதாக கடலை ஆழமாக்கினால் கப்பல்கள் இலங்கையைச் சுற்றத் தேவையிருக்காது. எனவே, 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர்கள் இந்தக் கால்வாயை ஆழப்படுத்த திட்டமிட்டனர். 1860இல் கமாண்டர் டெய்லர் என்ற ஆங்கிலேயப் பொறியாளர் முதன்முதலில் இது குறித்துப் பரிந்துரைத்தார். அவரைத் தொடர்ந்து டவுன்சென்ட், சர்வில்லியம் டென்னிஸன் போன்றோர்களும் இத்திட்டத்தை விரிவுபடுத்தினர். 1871இல் ஸ்டோடர்ட், 1872 இல் ராபர்ட்சன், 1884இல் சர் ஜான் கோட், 1903இல் தென்னிந்திய ரயில்வே பொறியாளர்கள், 1922இல் சர் ராபர்ட்பிஸ்டோ என்று தொடர்ந்து இதற்கான பரிந்துரைகள் காகிதங்களாகவே இருந்தன. சுதந்திர இந்தியாவில் இந்தப் பரிந்துரைகள் 'சேது சமுத்திரத் திட்டமாக' உயிர்பெற்றது.

"சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்ற பாரதியின் நூற்றாண்டுச் சிந்தனை, தமிழக மக்களின் 150 ஆண்டு கால கனவாகவே இருக்கிறது. தமிழினக்கால்வாய், சேது சமுத்திரக் கால்வாய் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் இத்திட்டத்தின் அவசியம், அவசரம் குறித்து, அறிஞர் அண்ணா முதன் முதலில் நாடாளுமன்றத்தில் பேசினார். 1968 ஏப்ரல் மாதத்திய 25ஆம் நாள் காஞ்சி இதழில், "தனுஷ்கோடியைக் கடல் மூழ்கடித்ததால் தமிழன் கால்வாய் எனப்படும் சேதுக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகிவிட்டது" என்று எழுதினார்.

நூற்றாண்டுகளுக்கும் மேலாக, வெறும் பரிந்துரைகளாக இருந்த இந்தத் திட்டம் குறித்து, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் வைகோ நாடாளுமன்றத்தில் பேசிப் பேசி உயிர்ப்புடன் இருக்க வைத்தார். 1998இல் செப்டம்பர் 15இல் சென்னை மெரினா கடற்கரையில் நடந்த மதிமுக கூட்டதில் பேசிய பிரதமர் வாஜ்பாய், 'சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும்' என முதன் முறையாக உறுதிமொழி அளித்தார். ஒருவழியாக 2004இல் வாஜ்பாய் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2005இல் மன்மோகன்சிங்கால் தொடங்கி வைக்கப்பட்டது சேதுசமுத்திரத் திட்டம். இந்திய அரசும் தனுஷ்கோடி அருகே கடலை ஆழப்படுத்தி கப்பல் போக்குவாத்திற்கு ஏற்றதாக மாற்றும் முயற்சியைத் துவங்கியது. இதன்படி சுமார் 400 கி.மீ. தொலைவு மற்றும் 30 மணி நேரக் கடல் பயணம் மிச்சப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்திட்டத்தின் வழித்தடம், ராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் வகையில் இருந்ததால், அதற்கு எதிர்ப்பு எழுந்தது. கடலில் மூழ்கியுள்ள அந்த நிலத்திட்டுகளின் படத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா வெளியிட்ட நாள் முதல், 'இதுதான் ராமர் கட்டிய பாலம்' என்ற மதவாத அரசியல் துவங்கிவிட்டன. புராணத்தைத் தவிர வேறு எந்தவித வரலாற்று ஆதாரமும் இல்லையென்றாலும், பாஜக, சிவசேனா, சங்கராச்சாரிகள் என வரிந்துகட்டி வந்து திட்டத்தைக் கிடப்பில்போட பேருதவி(!) செய்தனர்.

பெரிய கண்டங்களையோ நிலப்பகுதிகளையோ இணைக்கும்மெல்லியதான நிலப்பகுதியை பூகோளவியலில் 'இஸ்மஸ்' என்று அழைக்கின்றனர். இப்படியான இஸ்மஸ்கள் உலகில் ஏராளமாக உள்ளன. அவை கடலில் மூழ்கியோ அல்லது மேலே நிலத் திட்டுகளாகவோ அல்லது ஒன்றிணைந்து தீவுகளாகவோ இருக்கின்றன. பசுபிக் பெருங்கடலையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் இணைத்த (பனாமா நாடு என்று உலக வரைபடத்தில் இன்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்) மெல்லிய நிலப்பகுதியில்தான் பனாமா கால்வாய் தோண்டப்பட்டது. மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் சூயஸ் காலவாய், ஐரோப்பிய கண்டத்தையும், ஆப்பிரிக்கக் கண்டத்தையும் மெல்லிய நிலப்பகுதியாக இணைக்கும் நிலத்திட்டில் வெட்டப்பட்டே உருவாக்கப்பட்டது. நியூசிலாந்தின்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# சீனாவில் சுற்றுலா படகுகள் கவிழ்ந்து விபத்து 10 பேர் பரிதாப பலி



சீனாவின் குய்சோவு மாகாணத்தில் 4 சுற்றுலா படகுகள் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் குய்சோவு மாகாணத்தில் பலத்த காற்று வீசியதால் படகுகள் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதையடுத்து படகில் பயணம் செய்த 84 பேர் நீரில் மூழ்கினர். இந்த விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 70 பேர் காயத்துடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மே 1-5 வரை சீனாவின் மே தின விடுமுறை என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். ஒரே படகில் அதிகமானவர்கள் பயணம் செய்தது விபத்திற்கு காரணம் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# போர் மூண்டாலும் இந்தியா பாதுகாப்பாக இருக்கும் மூடிஸ் நிறுவனம் கணிப்பு




அமெரிக்காவில் நியூயார்க்கை தலைமையிடமாக கொண்டு செயல்படும் நிறுவனம் மூடிஸ். இது கடன் தர நிர்ணய நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் ஆய்வாளர்கள், ஒரு நிறுவனத்தின் நிதி நிலைமை, பொருளாதார நிலைமைகள் குறித்து ஆழமாக ஆய்வு செய்து கணிப்புகளையும், மதிப்பீடுகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

மதிப்பீட்டின் போது, மூடிஸ் நிறுவனமானது பணப்புழக்கம், நிதி விகிதங்கள், புவிசார் அரசியல் காரணிகள் என பல அம்சங்களை மையப்புள்ளியாக கொண்டு பகுப்பாய்வு செய்கிறது.அதன் அடிப்படையில், இந்தியா, பாகிஸ்தான் போர் பதற்றச்சூழல் குறித்தும், போர் மூண்டாலும் இரு நாடுகளின் பொருளாதார சூழல் எப்படி இருக்கும் என்றும் கணித்துள்ளது. இது குறித்து அந்நிறுவனம் கூறி உள்ளதாவது

கடந்தாண்டு இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில், பாக்.கிற்கு செய்யப்பட்ட ஏற்றுமதியின் பங்கு 0.5 சதவீதத்துக்கும் குறைவாகும். பாகிஸ்தானுடன் பெரிய அளவிலான பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடவில்லை.

ஆகையால், போர் பதற்றம் காரணமாக இந்தியாவின் பொருளாதார நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்பும் இருக்காது. இந்தியா மிக பாதுகாப்பாக இருக்கும். அதேநேரத்தில் பாதுகாப்புத்துறைக்கு அதிக செலவு செய்ய நேரிட்டால் இந்தியாவின் நிதி நிலையில் சற்றேதான் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆனால், போர் பாகிஸ்தானில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதில் பின்னடைவை எதிர்கொள்ளும். அந்திய செலாவணி கையிருப்பையும் பாதிக்கும். இவ்வாறு மூடிஸ் நிறுவனம் கூறி உள்ளது.

(ஐ)



# நிலநடுக்கத்தால் லேசாக அதிர்ந்த பாகிஸ்தான்: ரிக்டரில் 4.2 ஆக பதிவு

இஸ்லாமாபாத் பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அந்நாட்டு மக்கள் அச்சம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லை பகுதியில் இன்று மாலை 4 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆகவும், 10 கி.மீ., ஆழத்திலும் நிலநடுக்கம் பதிவாகி உள்ளது.

இந்த விவரத்தை அந்நாட்டின் தேசிய நிலநடுக்கவியல் மையம் அறிவித்துள்ளது. மிதமான நிலநடுக்கத்தால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டதா என்ற விவரங்கள் வெளியாகவில்லை.

பாகிஸ்தானில் கடந்தாண்டு மட்டும் கிட்டத்தட்ட 167 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் குறைந்த அளவிலான அதிர்வுகள் கொண்டவையாகும். அதாவது ரிக்டர் அளவுகோலில் 1.5 மற்றும் அதற்கு மேலாக பதிவானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயத்தில் நடுங்கும் பாகிஸ்தான் மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தி நாடகம்!

இந்தியாவுடனான பதற்றத்திற்கு மத்தியில், 2 நாட்களில் 2வது முறையாக ஏவுகணை சோதனை செய்ததாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில், பாக்., ஆதரவு பயங்கரவாதிகள் சமீபத்தில் தாக்குதல் நடத்தினர். இதனால், பாகிஸ்தான் மீது அரசியல் மற்றும் ராணுவ நடவடிக்கைக்கு நம் நாடு ஆயத்தமாகி வருகிறது.

இதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. இந்நிலையில், பாகிஸ்தான் ராணுவம் 'சிந்து போர் பயிற்சி' என்ற பெயரில் அப்தாலி என பெயரிடப்பட்ட ஏவுகணை சோதனையை நடத்தியது. இந்த ஏவுகணை, 450 கி.மீ., துாரத்தில் உள்ள இலக்கை தாக்கக் கூடியது. கராச்சி அருகே உள்ள சோன்மியானி ஏவுகணை தளத்தில் நடந்த இந்த சோதனை, வெற்றி அடைந்ததாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்து இருந்தது. இந்நிலையில் இன்று (மே 05) 2 நாட்களில் 2 வது முறையாக ஏவுகணை சோதனை செய்துள்ளது.

120 கிலோமீட்டர் தூரம் சென்று தாக்கும் பத்தா ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்ததாக பாகிஸ்தான் ராணுவம் அறிவித்துள்ளது. பயப்படாமல் இருப்பது போல் காட்டிக் கொள்ளவும், உள்நாட்டு மக்களை ஏமாற்றவும், இந்த சோதனையை நடத்தியுள்ளது அந்நாட்டு ராணுவம். அதேநேரத்தில் பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க இந்தியா தயாராகி வருகிறது. (ஐ)



### அமைதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும்நாடாளுமன்றத் தேர்தல் போல் இன்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அமைதியாக இடம்பெற்றது.

28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் என மொத்தம் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்தத் தேர்தல் நடைபெற்றது.

8 ஆயிரத்து 257 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 75 ஆயிரத்து 589 பேர் போட்டியிட்டனர்.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 877 உள்ளூராட்சி சபை வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆயிரத்து 759 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் ஊடாக இன்று வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

வாக்கெண்ணும் பணிகளுக்காகத் தொகுதி மட்டத்தில் 5 ஆயிரத்து 783 மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்து வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களில் வாக்குகள் எண்ணும் பணிகள் சற்றுமுன்னர் ஆரம்பமாகியுள்ளன.

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களில் இருந்து போட்டியிட்டனர்.

மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சென். ஜேம்ஸ் பாடசாலையிலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குடத்தனை பாடசாலையிலும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அத்தியடி கணபதி கலாசார மண்டபத்திலும் தமது வாக்குகளைச் செலுத்தச் சென்றமையைப் படங்களில் காணலாம்.

### நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனதுஜனநாயகக்கடமையைநிறைவேற்றுவதற்காக, விமானத்தில் இருந்து தரையிறங்கிய சிறிது நேரத்திலேயே ஜனாதிபதி தனது வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களித்தார்.

கொழும்பு, பஞ்சிகாவத்த அபே சுந்தரராமய விகாரையில் அவர் தனது வாக்கினை அளித்தார்.

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது வாக்கினைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது செல்வாக்கை இலங்கைத் தமிழரசுக் கட்சி காட்டியது. இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அமோக ஆதரவுடன் வெற்றி பெறும்." - என்றார்.

# உலக வங்கியின் தலைவர் இலங்கை விஜயம்

உலக வங்கியின் தலைவர் அஜே பங்கா இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அஜே பங்கா நாளைய தினம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி இது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

உலக வங்கியின் தலைவர் இலங்கை அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

20 ஆண்டுகளின் பின்னர் உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சி அமோக வெற்றியீட்டும்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும்கட்சி அமோக வெற்றியீட்டும்என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைந்தாலும் ஆளும் கட்சி வெற்றியீட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த நான்கரை மாதங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய சேவை தொடர்பில் மக்களுக்கு நல்ல தெளிவு உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது எனவும் உலக நாடுகள் மத்தியில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களிடம் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு போலியான குற்றச்சாட்டுக்களையும் சேறு பூசல்களையும் செய்த எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் நல்ல பாடம் கற்பிப்பார்கள் என்பதில் ஐயமில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# லொறி மோதி விபத்து– 8 வயது சிறுமி பலி!

பாதெணியவிலிருந்து அநுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த லொறி ஒன்று, வீதியைக் கடந்து சென்ற சிறுமி மீது மோதி ஏற்பட்ட விபத்தில் 8 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் அம்பன்பொல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதெணிய - அநுராதபுரம் வீதியில், நெலும்பத்வெவ சந்தி அருகே நேற்று (05) மாலை ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி, அம்பன்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பன்பொல பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் அம்பன்பொல வைத்தியசாலையின்பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அம்பன்பொல பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலைந்து போன.......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக்லாண்டு தீவுகள், கனடாவில் நியூ ஃபவுண்ட் லாண்ட் தீவுப்பகுதிகள், ஆஸ்திரேலியாவின் எண்ட்றி கேஸ்ட்டியக்ஸ் சேனல் நீர்வழி எனப் பல இடங்களில் நீர்வழிகள் வெட்டப்பட்டு, பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்யும் பயணதூரமும் நேரமும் சுருக்கப்பட்டது. அப்படிப்பட்ட பாதையாக மாறியிருக்க வேண்டிய திட்டம் அரசியல் காரணங்களால் வீணடிக்கப்பட்டது.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் ஓர் அங்கமான விண்வெளி பயன்பாட்டு மையம் நடத்திய ஆராய்ச்சியின் முடிவு இப்பாலம் இயற்கையாகத் தோன்றியதாகக் கூறியது. 2007ஆம் ஆண்டு மத்திய அரசு உச்சநீதிமன்றத்திற்கு அளித்த அறிக்கையில் ராமர் பாலம் மனிதனால் கட்டப்பட்டதற்கு ஆதாரம் இல்லை என்றும், புராணங்கள் வரலாற்றுப் பதிவு ஆக முடியாது என்றும் கூறியது. இந்தப் பிரமாணப்பத்திரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, திரும்பப் பெறப்பட்டு, இரண்டு இந்தியத் தொல்லியல்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதுடன் இந்தத் திட்டம் வகுப்புவாத நிறமாக மாற்றமடைந்தது.

"அட, ஆக்சுவலி, அது பாலமே இல்லீங்க, சுண்ணாம்புக் கற்களின் சங்கிலிதான், ஒரு நல்ல திட்டத்தை முடக்குவதற்கு மதவாதிகள் செய்யும் சதி" என்போர் ஒருபுறம், ராமர் பாலத்தை உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கைகள் மறுபுறம், 'இது கடல்வாழ் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கும்' என்ற சுற்றுச் சூழலியலாளர்களின் வாதம் இன்னொருபுறம் என்று சின்னாபின்னமாகிக் கிடக்கிறது தமிழனின் கனவுத் திட்டம்.

ராமர் சேது பற்றிய பல்வேறு ஆய்வுகள் உலகின் பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டன. 'ராமர் பாலம் கட்டுக்கதை அல்ல, அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதுதான்' என அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியதாக டிஸ்கவரி நிறுவனத்திற்குச் சொந்தமான அமெரிக்க அறிவியல் சேனலில் 'பூமியில் பாலங்கள்' நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகி பரபரப்பை ஏற்படுத்தியது. ராமர் பாலம் பகுதியில் கடலுக்கு அடியில் அமைந்துள்ள மணல்திட்டுகள் வேண்டுமானால், இயற்கையாக உருவாகியிருக்கலாம். ஆனால், அங்குள்ள சுண்ணாம்புக்கல் பாறைகள் மனிதர்களால் உருவாக்கப்பட்டவைதான் என்கிறார் தெற்கு ஓரிகன் பல்கலைக்கழக வரலாற்று அகழ்வாராய்ச்சியாளர் செல்சியா ரோஸ்.

ராமர் பாலம் என நம்பும் ஆதரவாளர்கள், நாசா படங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி வாதங்கள் செய்ய, 2013இல் நாசா செய்தி தொடர்பாளர் மைக்கேல், "விண்வெளி வீரர்கள் எடுத்த புகைப்படங்களைக் கொண்டு, இவர்கள் கூறும் எந்தக் கருத்தையும் தீர்மானிக்க முடியாது. எனவே இந்தக் கருத்துகளுக்கு எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை என்று கூறி முற்றுப்புள்ளி வைத்தார்.

இன்றைய தமிழ்நாடும் இலங்கைத் தீவும் ஒரு காலகட்டத்தில் ஒன்றாக இருந்த நிலப்பகுதிகளே. மிகப் பெரிய பூகம்பமும் கடல்கோளும் ஏற்பட்டு அதனால் பிரிந்த பகுதியே இன்றைய இலங்கைப் பகுதி என்பது புவியியலாளர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. அவ்வாறு கடல்கோளால் விழுங்கப்பட்ட நிலப்பரப்பின் சில பகுதிகளே தமிழக, இலங்கைக்கு இடையிலான கடற்பகுதியில் தீவுகளாகவும் நிலத்திட்டுகளாகவும் மாறியிருக்க வேண்டும். புவியின் டெக்டானிக் தட்டுகளின் இயக்கம் மற்றும் பவளப்பாறைகளில் மணல் சிக்கியதால் உருவான இயற்கை அமைப்புதான் ராமர் சேது என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், சரக்குக் கப்பல்கள் அரபிக்கடலுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் பயணிக்க இனி இலங்கையைச் சுற்றிவரத் தேவையில்லை, நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள முடியும், ரோந்து பணிகளை அதிகரிப்பதால் கடத்தலைத் தடுக்க முடியும் என்று இத்திட்டத்தின் நன்மைகள் ஒருபுறம் பட்டியலிடப்பட்டாலும் புராணக் கண்ணாடிகளைக் கழற்றி வைத்துவிட்டு அறிவியல் உலகைப் பார்க்கும் மனிதர்களின் மனப்பக்குவத்திற்காகக் காத்துக்கிடக்கிறது செல்லரித்துப் போன காகிதங்கள்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2025 வெளியிடப்பெற்றது.